## **CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT COURT MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO. 208 /2017 PW 1**

Name : எம். சுந்தரபாண்டியன்
Father's name : மச்சராசுத்தேவர்
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 26th October 2018

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை கோச்சடை அருகே உள்ள டோக்நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மேல்மதுரைகிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் அச்சம்பத்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது எனதுகிராம உதவியாளராக சாட்சி போஸ் என்பவர் பணிபுரிந்தார். 26-09-2014 அன்று சுமார் மாலை 6 .30 மணியளவில் நான் அச்சம்பத்து கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தபோது அச்சம்பத்து கிராமத்தை சேர்ந்த கல்யாணசுந்தரத்தின் மகன்கள் சரவணன், மற்றும் ரமணன் ஆகியோர்கள் எனது அலுவலகத்திற்கு வந்து தங்களது தோட்டத்தில் அடையாளம் தெரியாத சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆண்பிணம் கிடப்பதாக தகவல் கூறினார்கள். அவர்களுக்கு அவர்கள் தோட்டதின் காவலாளி ஆறுமுகம் என்பவர் தகவல் தெரிவித்ததாக கூறினார். அதன்பிறகு நானும் எனது கிராம உதவியாளர் போஸ் என்பவரும் சம்பவயிடத்திற்கு நேரில் சென்று பார்த்ததில் அவர்கள் கூறியபடியே சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆண்பிணம் ஒன்று முகம் சிதைந்த நிலையில் கழுத்தில் கத்திகுத்துடன் கிடந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்ததில் யாருக்கும் அவரை அடையாளம் தெரியவில்லை. அதன்பிறகு நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையம் சென்று நான் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். அதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த புகார் அசாஆ 1. அதன்பிறகு காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்களுடன் சம்பவயிடத்திற்கு நேரில் வந்தேன். பிரேதத்தை பரிசோதித்ததில் அவரது சட்டை பையில் இருந்த ஓட்டுனர் உரிமத்தை காவல் ஆய்வாளர் கைப்பற்றி காண்பித்தார். அதில் சாகுல்ஹமீது த/பெ அப்துல் அஜீஸ் என்று குறிப்பிட்டிருந்தது. முகவரி ஹாஜிமார் தெரு மதுரை என்று இருந்தது. பிறகு காவல் ஆய்வாள் ரபிரேதத்தை கைப்பற்றி ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நானும், கிராம உதவியாளரும் எங்கள் வாகனத்தில் அரசு மருத்தவமனைக்கு சென்றோம். அங்கு ஓட்டுனர் உரிமைத்தில் காணப்பட்ட முகவரியில் இருந்து சடலத்தின் உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்ட

வரவழைக்கப்படுவதாக கூறி வரவழைத்தார்கள். அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கில் இறந்தவரின் சகோதரி இறந்தவரின் சடலத்தை பார்த்து தனது சகோதரர் என்று உறுதி செய்தார். அதன்பிறகு நாங்கள் திரும்பி விட்டோம். மறுநாள் 27-09-2014 அன்று சுமார் மதியம் 2 மணியளவில் மேற்கண்ட சம்பவம் தொடர்பாக சில நபர்களை விசாரிப்பதற்காக எங்களை துவரிமான் 4 வழிச்சாலை பேருந்து நிறுத்ததிற்கு வரும்படி காவல் ஆய்வாளர் கூறினார். நானும் எனது கிராம உதவியாளர் போஸ் என்பவரும் சென்றோம். அங்கு சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் சிவராமகிருஷ்ணன் என்ற மணி எலி என்ற ஹரி மற்றும் பாலாஜி ஆகியோர்கள் காவல் ஆய்வாளரோடு இருந்தார்கள். காவல் ஆய்வாளர் 1வது எதிரி சிவராமகிருஷ்ணனிடம் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதை எங்கள் முன்னிலையில் மடிக்கணினியில் பதிவு செய்தார். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பிறகு காவல் ஆய்வாளர் 2வது எதிரி எலி என்ற ஹரியிடம் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதை எங்கள் முன்னிலையில் மடிக்கணினியில் பதிவு செய்தார். 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பிறகு காவல் ஆய்வாளர் 3வது எதிரி பாலாஜி என்பவரிடம் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதை எங்கள் முன்னிலையில் மடிக்கணினியில் பதிவு செய்தார். 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எங்களையும் எதிரிகளையும் காவல் ஆய்வாளர் பிரேதம் கிடந்த இடத்திற்கு அழைத்து சென்றார். அப்போது மணி சுமார் 3.30 இருக்கும். பிரேதம் கிடந்த இடத்திற்கு சற்று தள்ளி சுமார் 1 அடி நீளமுள்ள ரத்தம் படிந்த நிலையில் உள்ள ஒரு கத்தியை கிணற்றின் அருகே இருந்த செடி புதரில் இருந்து எதிரிகள் மூவரும் தேடி எடுத்து ஆஜர் செய்தனர். அதை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அசாஆ 2. அந்த அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். கத்தியின் மரக்கைப்பிடி சுமார் 10 செமீ நீளம் இருக்கும் . மீதி இருந்தது இரும்பு பாகம் ஆகும். அந்த கத்தியை என்னால் அடையாளம் காட்ட முடியும்.என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தி தான் அது. அந்த கத்தி சாபொ1. மேலும் கிணற்றின் அருகில் மோட்டார் ரூமில் இருந்து சற்று தொலைவில் இருந்த ஒருகருங்கல்லை எதிரிகள் மூவரும் அடையாளம் காட்டினார்கள். அந்த கருங்கல்லையும் காவல் ஆய்வாளர் அத்தாட்சி தயாரித்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அசாஆ 3. அந்த கருங்கல்லில் ரத்தக்கறை படிந்திருந்தது. அந்த கருங்கல்லை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கருங்கல் தான் அது. அந்த கருங்கல் சாபொ2. அவர்கள் மூவரையும் காவல் ஆய்வாளர்கைது செய்து

காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார். நாங்கள் எங்கள் வாகனத்தில் காவல்நிலையம் சென்றோம். அங்கு ஒப்புதல் வாக்குமூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது அதில் நாங்கள் கையொப்பம் இட்டோம். அதன்பிறகு நாங்கள் எங்கள் அலுவலகத்திற்கு சென்று விட்டோம். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறுவிசாரணை**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு,
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து
பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்து காண்பித்து
அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்/கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி
மதுரை